**செய்தி வெளியீடு எண்:732** **நாள்: 02.11.2017**

# செய்தி வெளியீடு

ஆணையர், சமூக பாதுகாப்புத் துறை, சென்னை அவர்களால் மாநில தத்து வள ஆதார மையத்தில் காலியாக உள்ள திட்ட உதவியாளர் பதவிக்கான தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் திட்ட உதவியாளர் மாநில தத்து வள ஆதார மையத்தில் முற்றிலுமாக தற்காலிக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார். இவர் அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

**தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம்.**

- திட்ட உதவியாளர் (Programme Assistant) – 1 பணியிடம்
  (தொகுப்பூதியம் ரூ, 10,000/– ஒரு மாதத்திற்கு)

**கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:**

**அடிப்படை கல்வி தகுதி:–**

- இளங்கலை (அல்லது) முதுகலை பட்டம் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
  (10 +2 +3 முறையில் கல்வி பயின்றிருக்க வேண்டும்.)

**பணி அனுபவம்:–**

- கணினியில் அடிப்படை அறிவு
- சரளமாக தமிழ் மற்றும் ஆங்கிலம்
- அறிவு/அனுபவம் கொண்ட விண்ணப்பத்தாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**வயது வரம்பு:–**

- 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
  (அல்லது)
- அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் நிகழ்வில் 62 வயதிற்கு மிகாமல் இருக்கவேண்டும். இந்நிகழ்வில் தனியர் அதிகபட்சமாக 62 வயதினை நிறைவு செய்யும் வரை மட்டுமே தற்காலிகமாக பணியாற்ற இயலும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்கள் i.e. http://www.tn.gov.in/job_opportunity அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் 13.11.2017 மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

மாநில தத்து வள ஆதார மையம்
சமூகப் பாதுகாப்புத் துறை,
எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–10
தொலைபேசி : 044–26423050

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**